# இஸ்லாம்

தரம் 10

# பாடத்திட்டம்

தேசிய கல்வி நிறுவகம்

இலங்கை

2007

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பிரபஞ்சம், வாழ்வு, மனிதன் பற்றிய இஸ்லாமிய உலக நோக்கு மிகத் தெளிவானது. அதனை அல்குர்ஆன், ஸுன்னாவின் அடிப்படையில் விளங்கி, இஸ்லாமிய அறிவும், சிந்தனைத் தெளிவும், ஒழுக்க மாண்பும் பெற்ற செயல்திறன் மிக்க முஸ்லிமை உருவாக்குதல். அதே நேரத்தில் அவர் நாட்டுக்குப் பயனுள்ள குடிமகனாகவும், மனித சமூகத்திற்கு பயன்படத்தக்க நல்ல மனிதனாகவும் பணியாற்றுவார்.

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 10.1. | அறிமுகம் | iii |
| 10.2 | பாடக்குறிக்கோள்கள் | v |
| 10.3 | வகுப்புக்குரிய தேர்ச்சிகள் | vi |
| 10.4 | கற்றல் கற்பித்தல் முறை | vii |
| 10.5 | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | ix |
| 10.6 | கணிப்பீடும் மதிப்பீடும் | xi |
| 10.7 | பாடத்திட்டம் | 1 - 4 |
| | தேர்ச்சி | |
| | தேர்ச்சி மட்டம் | |
| | பாட உள்ளடக்கம் | |
| | உதவேச பாடவேளைகள் | 5 |

## 10.1 அறிமுகம்

மனிதன் இரு கூறுகளைக் கொண்டவன். உடல் (Physical Body), உள்ளம் (Spritual Body - ஆத்மா) ஆகிய இரண்டுமே அவையாகும். உடல் போசிக்கப்படுவது போலவே உள்ளமும் போசித்து வளர்க்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும். உடல், உள்ளம் - அகம், புறம் ஆகிய இவ்விரண்டுக்குமிடையிலான சமநிலை பேணப்பட்டு போசிக்கப்படும் போதுதான் மனித ஆளுமை விருத்தி முழுமை பெறுகின்றதென்பது இஸ்லாத்தின் உறுதியான நிலைப்பாடாகும். இந்த வகையில் உணவு, உடை, உறையுள், சுகாதாரம் முதலான மனிதனது புறத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது போல அவனது ஆன்மீக - தார்மீகத் தேவைகளும் நிறைவாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்ற வகையிலேயே இஸ்லாத்தின் போதனைகளும் வழிகாட்டல்களும் அமையப்பெற்றுள்ளன.

ஆனால் இன்றைய உலகில் சடவாத சிந்தனைகளின் அதீத செல்வாக்கினால் மனிதனது சூட்சும உடம்பு (ஆத்மா) புறக்கணிக்கப்பட்டுவருகின்றது. இதன் விளைவாக புற வாழ்வில் மனிதன் அடைந்துள்ள முன்னேற்றங்கள் அவன் எதிர்பார்த்த மகிழ்ச்சியையும் நிறைவையும் அவனுக்கு வழங்க தவறிவிட்டமையை நாம் உணர்கின்றோம். இன்றைய மனிதன் மனித வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு கவலைகள், மன இறுக்கம், தளர்ச்சி, விரக்தி முதலான உள நோய்களால் பாதிக்கப்படுகின்றான். ஆன்மிக வறுமையும் (Spritual Pourty) வெறுமையுமே இவ்வவல நிலைக்கான காரணம் என்பதை இப்போது உலகம் உணரத் தலைப்பட்டிருக்கின்றது. இதனால்தான் அண்மைக் காலங்களாக உலகளாவிய ரீதியில் ஆன்மீகத்தின் அவசியத்தை அறிஞர்கள், சிந்தனையாளர்கள், கல்வியியலாளர்கள் அனைவரும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

இப்பின்னணியில் எமது தாய் நாட்டிலும் சமயம் தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வில் கூடிய முக்கியத்துவம் பெற வேண்டும் என்ற கருத்து இப்போது வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பின் புலத்தில் தான் நமது கல்விக் கூடங்களில் சமயப் பாடம் கட்டாயமாக்கப்பட்டு போதிக்கப்பட்டு வருகின்றது. இதனூடாக நலிவுற்றுப் போயுள்ள தார்மீகப் பண்புகளையும் ஆன்மீகப் பண்புகளையும் மேலோங்கச் செய்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இன்று வேகமாக மாறிக்கொண்டுவரும் உலகின் சவால்களுக்கு முன்னால் மனிதனின் சமய ரீதியான ஆளுமைப் பண்புகள் தளர்ந்து விடாமல் காப்பாற்றுவதற்காக கவர்ச்சிகரமான முறையில் சமய போதனைகள் முன்வைக்கப்பட வேண்டுமென உணரப்பட்டிருக்கின்றது. இதனால் தான் புதிய பாடத்திட்டத்தில் சமய பாடமும் எப்போதும் போல் இணைக்கப் பட்டுள்ளது.

அந்த வகையில் இஸ்லாம் பாடத்திட்டத்னூடாகவும் மாணவரிடையே அறிவு, திறன், மனப்பாங்கு, செயற்பாடு என்பன வளர்க்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதனை அடையக்கூடிய விதத்தில் இப்பாடத்தை முன்வைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடசாலைத் தொகுதியிலுள்ள எல்லாப் பாடத்திட்டங்களும் மாற்றியமைக்கப்படுகின்றன. விருத்தியுற்றுவரும் விஞ்ஞான தொழினுட்பத் துறைகளோடு ஒன்றியுள்ள மனித வாழ்க்கைக்கு சாந்தியும், சமாதானமும் ஏற்படக் கூடிய நடைமுறையில் பின்பற்றியொழுகத்தக்க விதத்தில் இப்பாடத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இஸ்லாம் நிலையானது; காலத்தால் மாறாதது. ஆதலால் மாணவர்களின் தேவைகளுக்கேற்ப அதனைக் கவர்ச்சிகரமாகவும் நவீன முறையிலும் உள்ளத்தில் ஆழ்ந்த தாக்கத்தையும் நடைமுறையில் உறுதியான பற்றுதலையும் ஏற்படுத்தக்கூடிய முறையில் வழங்குவதற்காக முயற்சித்துள்ளோம்.

இந்த வகையில் 10 ஆம் தரத்திலிருந்து வெளியேறும் மாணவர்கள் பின்வரும் தேர்ச்சிகளை அடைந்திருப்பர் என எதிர்பார்க்கிறோம். பதினோராம் தரத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதுவதற்குத் தம்மைத் தயார் படுத்திக் கொண்ட நிலையில் பின்வரும் தேர்ச்சிகளையும் அடையக் கூடிய அறிவையும், பயிற்சியையும் பெற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

- அகீதா பற்றிய தெளிவான அறிமுகத்தைப் பெற்று ஈமானில் உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வார்.

- இபாதத் பற்றிய கண்ணோட்டத்தை விளங்கி அவற்றை நிறைவேற்றும் பயிற்சியையும் மனப்பக்குவத்தையும் அடைவார்.

- எல்லா உறுப்புக்களையும் பாவங்களிலிருந்து காத்துக்கொள்ள வேண்டு மென்ற மனப்பாங்குடன் பாவத்திலிருந்து விலகி நேர்மையுடன் செயற்படுவார்.

- குடும்பத்துக்குத் தான் செய்ய வேண்டிய பணிக் கூறுகளை விளங்கி ஷரீஅத்தின்படி நடந்து கொள்வார்.

- சட்ட மூலாதாரங்களை விளங்கி அவற்றை மதித்தும் மற்றும் வாழக்கூடிய மனப்பாங்குகளையும், பயிற்சியையும் பெறுதல்.

- நபி (ஸல்) அவர்களதும், அவர்களின் குடும்பத்தவர்கள், தோழர்கள் என்போரதும் த.்.வா வாழ்க்கை முறையினை விளங்கி முஸ்லிமுடைய வாழ்வில் த.்.வாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து நடப்பார்.

- நவீன உலகின் எல்லாப் போக்குகளுக்கும் இஸ்லாம் வழங்குகின்ற தீர்ப்பை விளங்கி செயற்படும் பக்குவத்தைப் பெறுவார்.

இவற்றை உருவாக்குவதில் ஆசிரியர்கள் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 10.2 பாடக் குறிக்கோள்கள்

- இஸ்லாத்தின் மீது பூரண நம்பிக்கையும், அதன் கோட்பாடுகள் பற்றிய அறிவும் அதன் நடைமுறைகள் பற்றிய பயிற்சியும் உடைய இளம் சந்ததிகளை உருவாக்குதல்.

- கலிமா, தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் முதலான அடிப்படை இபாதத்துக்களின் தத்துவங்களையும், நல்லதை ஏற்றல், கூடாததைத் தவிர்த்தல் என்ற அமைப்பில் வாழ்க்கையை நடத்திச் செல்வதன் அவசியத்தையும் விளங்கி நடத்தையில் பிரயோகிப்பதற்காக பயிற்சியை வழங்குதல்.

- நாளாந்த வாழ்க்கையிலேற்படும் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளக்கூடிய பிறருடன் பிணங்கிக் கொள்ளாமல் செயல்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்லக்கூடிய போதிய அறிவும், தகுந்த பயிற்சியும், விரும்பத்தக்க பக்குவமும் கொண்ட (முஸ்லிம்) பரம்பரையை உருவாக்குதல்.

- இஸ்லாமிய குடும்ப வாழ்க்கை பற்றிய விளக்கங்களை அறிந்து குடும்ப உறுப்பினர் என்ற வகையில் குடும்பப் பொறுப்புக்களை உணர்ந்து பங்களிப்புச் செய்கின்ற பரம்பரையை உருவாக்குதல்.

- இஸ்லாத்தின் மூலாதாரங்களை அறிந்து, அதன்படி வாழ்ந்து பிறருக்கு முன்மாதிரியாக அமையக்கூடிய தனி நபர்களையும், சமூகத்தையும் உருவாக்குதல்.

- இஸ்லாம் உலகில் அறிமுகமானது முதல் அதன் படிமுறையான வளர்ச்சிக்கட்டத்தில் பல்வேறு துறைகளில் பங்களிப்புச் செய்த தனி நபர்களை விளங்கி எதிர்காலத்தை நடத்திச் செல்வதற்கான அறிவையும், திறனையும் பெற்ற மாணவர்களை உருவாக்குதல்.

- ஓய்வு நேரத்தை சரியாகப் பயன்படுத்தி, உழைப்பில் நேர்மையைக் கையாளுகின்ற இஸ்லாமிய அடிப்படையில் வழிநடத்தக்கூடிய தலைமைப் பண்புடைய மாணவர்களை உருவாக்குதல்.

- கல்வி மரணிக்கும் வரை தேடப்படவேண்டும் என்ற இஸ்லாத்தின் கோட்பாட்டை விளங்கிக் கற்பதை தொடராக மேற்கொள்கின்ற நடைமுறை விவகாரங்கள் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தைப் பெற்றுக் கொள்கின்ற பரம்பரையை உருவாக்குதல்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 10.3 வகுப்புக்குரிய தேர்ச்சிகள்

1. (அல் அகாஇத்)
ஏகத்துவம் (தவ்ஹீத்), தூதுத்துவம் (ரிஸாலத்), இறுதிநாள் (மஆத்) ஆகியவற்றை நம்பி ஒழுகுவார்.

2. (அல் இபாதத்)
வாழ்வே வணக்கம் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றி வருவார்.

3. (அல் அக்லாக் வஸ்ஸுலூக்)
நற்குணமும் நன்னடத்தையும் மிக்கவராக விளங்குவார்.

4. (பிக்ஹுல் உஸ்ரா)
இஸ்லாமிய குடும்ப வாழ்க்கையின் வழிகாட்டுதல்களைப் பெற்று ஒழுகுவார்.

5. (பிக்ஹுல் மாலிய்யாத்)
உழைப்பிலும் வருமானத்திலும் ஹலால், ஹராம் பேணி நம்பிக்கை நாணயத்துடன் நடப்பார்.

6. (உஸுலுல் பிக்ஹு)
வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் ஷரீஆவின் கண்ணோட்டத்தில் அணுகுவார்.

7. (அஸ்ஸீறா வத்தாரீக்)
வாழ்க்கைக்குத் தேவையான அடையாள புருஷர்களை இனங்கண்டு பின்பற்றி ஒழுகுவார்.

8. (மபாஹிமுல் இஸ்லாமிய்யா)
நடைமுறை விவகாரங்கள் பற்றிய இஸ்லாமிய நோக்குகளை அறிந்து கடைப்பிடிப்பார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 10.4 கற்றல் - கற்பித்தல் முறை

கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவுமட்டம் பயனுறுதிமிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதிமிக்க கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் கட்டுருவாக்கவியல் சிந்தனையில் உருவான 5 E மாதிரி மிகச் சிறப்பான ஓர் அம்சமாகும். மாணவர்கள் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படையாகும். மாணவர்களது ஆக்கத்திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூகத்திறன் என்பவற்றை வளர்த்துவிடக்கூடிய ஒரு கற்றல் முறையாக இது அமைந்துள்ளது.

குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்குகளினூடாக மாணவரது நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான ஒரு மாற்றத்தை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சமய பாடத்தைப் பொறுத்த மட்டில் மாணவர்களின் மூளையை அறிவால் போசித்து, கைகளில் திறன்களை வளர்த்துவிடுவது போதுமானதல்ல. சமய பாடத்தின் மூலம் முக்கியமாக எதிர்பார்ப்பது நடத்தை மாற்றமேயாகும். அதனை ஏற்படுத்த ஓர் இலகு வழியாக தேர்ச்சிமையக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சி மையக் கல்வியில் ஆசிரியரது வகிபாகம் தெளிவான மாற்றமொன்றை வேண்டி நிற்கின்றது. தாம் பெற்றிருக்கும் அறிவை மாணவருக்கு அப்படியே ஒப்புவிப்பதன் மூலம் கல்வி இடமாற்றம் செய்பவராக விளங்கிய ஆசிரியரின் செயன்முறை ஆதிக்க மிகைப்பு, மாற்றப்பட வேண்டியதொன்றாகும்.

தேர்ச்சிமையக் கல்வியில் மாணவரின் ஈடுபாடு மிகைத்து நிற்கிறது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடைய வேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்த பட்ச அடைவுமட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்வது ஆசிரியரது கடமை. மாணவரை சரியாக இனங்கண்டு கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழிகாண்பது ஆசிரியரது கடமையாகும்.

முதலில் மணாவரை ஆகர்சித்து, ஆர்வத்தோடு எதிர்பார்க்கும் தன்மையினை தோற்றுவிக்க வேண்டும். இங்கு விருத்தி செய்துகொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூறப்படுவதாகும். இதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாளலாம்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

வினாக்கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள், செய்தித்துண்டுகளை முன்வைத்தல், அட்டைகளைக் காட்சிப்படுத்தல், கவிதைகள், புதிர்கள், போலச் செய்தல், பாடல்கள், ஒளி ஒலி நாடாக்கள் செய்து காட்டல் போன்ற உத்திகளைக் கையாளலாம். உதாரணமாக பத்தாம் தரத்தில் மன ஆரோக்கியம் பற்றிய பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்னர், மனநோயால் பாதிக்கப்பட்ட ஒருவரை அவதானிக்கச் செய்து அவர் பற்றிய கருத்துக்களை மாணவர்களுக்கு எழுதுமாறு கூறினால் மாணவரின் உள்ளக் கருத்துக்களை பரவலாக அறியக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும். அவற்றை மையமாகக் கொண்டு ஆசிரியர் பாடத்துள் பிரவேசிக்கலாம். இக் கற்றல் முறையில் ஆசிரியர் அறிமுகத்துக்காகப் பயன்படுத்தும் உத்திகள், வழிமுறைகள் மிக முக்கியமானவை. ஆதலால் பொருத்தமானவற்றைத் தெரிந்தெடுப்பதில் ஆசிரியர் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். ஏனெனில் குறிப்பிட்ட அலகை ஆசிரியர் கையாளும் முறை, மாணவரில் ஏற்படுத்தும் தாக்கம் நடத்தை மாற்றத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவல்லதாகும்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 10.5 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

பிரச்சினைகள் தோன்றிய சந்தர்ப்பங்களில் அவற்றுக்காக முன்வைக்கப்பட்ட தீர்வுகளின் ஊடாகவே சகல ஆக்கங்களும் பதிந்துள்ளன. பல்வேறு நாடுகளில் புத்தாக்கங்கள் தோன்றியமைக்கான காரணம், அந்நாடுகளின் பாடசாலைத் தொகுதியில் புத்தாக்கம் புரிவதற்கேற்ற பின்னணியைக் கொண்ட கலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமையாகும். எனினம் எமது நாட்டுப் பாடவிதானம் பரீட்சையை இலக்காகக் கொண்ட ஏட்டுக் கல்விக்கு முதலிடம் வழங்கி நடைமுறைப்படுத்தப்படுகின்றமையால் புத்தாக்கம் புரிவோரும் புத்தாக்கங்களும் அரிதாகவே உருவாகும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு புதிய கலைத்திட்டம் அறிமுகஞ் செய்யப்படுதலானது அவ்வாறான ஆக்கத்திறன்மிக்கோரை உருவாக்க வழிகோலும் என்பதும் ஐயமில்லை. இவ்வாறான ஆக்கபூர்வமான ஒரு பாடத்தை நடைமுறைப்படுவதற்குப் பொருத்தமான பின்னணிப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில் பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கைகளும் இசைவுபடுத்தப்படல் வேண்டும்.

இஸ்லாம் பாடத்திட்டத்தினூடாக புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின்பால் வழிப்படுத்தப்படும் மாணவரின் திறன்களையும், மனப்பாங்குகளையும் விருத்தி செய்துகொள்வதற்கு உதவுவதற்காக பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படும் பல்வேறு பாடசாலைச் செயற்பாடுகளைத் துணையாகக் கொள்ளல் சிறந்ததாகும். இப்புதிய கலைத்திட்டத்தைப் பாடசாலையில் அமுல்படுத்துவதற்காக பின்வரும் வழிவகைகளை மேற்கொள்ளலாம்.

1. சமய கலாசார விழுமியங்களை மேம்படுத்த விரும்பும் அமைப்புக்களை பாடசாலையில் நடத்தச் செய்தல்

2. மத்ரஸாக்கள், ஜாமிஆக்கள், பயிற்சி முகாம்கள் போன்றவற்றைப் பார்வையிடுவதற்காக கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தி மாணவரை பங்குபற்றச் செய்தல்

3. பாடசாலைக்குத் தேவையான இஸ்லாமிய நடைமுறைகளை மாணவர் தாமாக திட்டமிட்டு அமைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்

4. புத்தகங்கள், செயற்றிட்டங்களை உள்ளடக்கிய போட்டிகள், நிகழ்ச்சிச் திட்டங்கள் போன்றவற்றை நடத்தல்

5. இனங்காணப்பட்ட புத்தாக்கம் படைத்த மாணவர்களையும் அவர்களுக்கு வளப்பங்களிப்புச் செய்தோரையும் அழைத்து செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும், அவர்களின் சேவைகளை பாடாசலைக்குப் பெற்றுப் கொள்ளலும்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர் குழாத்தினதும் மாணவ மாணவியரதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்பை வழங்க அதிபர் தயங்குதலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகளிலிருந்து சற்று விலகி பாடசாலைக்கெனச் சிறப்பான ஒரு கொள்கைக் கோவையை வகுத்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறாக ஒரு கொள்கைச் சேவையை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக, பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் அறிவையும் பெரும் பயனடையலாம்.

மேலும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காக தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்துதலும், பயனுறுதிமிக்க நேர முகாமையும் மிக முக்கியமான வையாகும். எனவே இஸ்லாம் பாடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள இரண்டு பாடவேளைகளும் தொடர்ச்சியாக அமையும் வகையில் ஒதுக்கி வழங்க முடியுமாயின் அது பெரிதும் நன்மை பயக்க இடமுண்டு. மேலும் இப்பாடத்துக்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்யும்போது பின்வரும் பிரமாணங்கள் குறித்துக் கவனஞ் செலுத்துவது பயனுடையது.

- இஸ்லாம் பாடத்துக்கென பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்
- மௌலவி/அஷ்ஷெய்கு தராதரம் பெற்ற ஆசிரியர்கள்
- இஸ்லாமிய கலாசாரத்தைப் பட்டப்படிப்புக்கு ஒரு பாடமாகக் கற்றவர்கள்

பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்போன்றவாறாக நடைமுறைப்படுத்துவதால் அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரினை குறைவின்றி உருவாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 10.6 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையினூடாக மாணவர் அடைய வேண்டிய தேர்ச்சிகளை அடைந்துள்ளனர் என்பதை அறிவதற்காக எளிய வழிமுறையாக கணிப்பீடும் மதிப்பீடும் அமைந்தள்ளன. இஸ்லாம் பாட உள்ளடக்கம் மாணவரின் நடத்தை சார்ந்த பண்புகள் வணக்க வழிபாடுகள் மீது கொண்டுள்ள அக்கறை, சமய சமூக செயற்பாடுகளில் ஈடுபாடு போன்றன கணிப்பீடு செய்யப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது வகுப்பறைக்குள்ளும், வகுப்பறைக்கு வெளியிலும் குறித்த தேர்ச்சியை அடைந்தள்ளாரா என முறைசார், முறைசாரா வகைகளில் இடம்பெற வேண்டும்.

பாடம் தொடர்பான மதிப்பீடு, பாட அலகின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு முடிவுற்ற பின்பும், மாத, தவணை, ஆண்டு இறுதிகளில் வாய்மொழி வினாக்கள் மூலமாகவோ, எழுத்து வினாக்கள், வேலைத்திட்டங்கள் போன்றன மூலமாகவோ நடத்தப்படலாம்.

இவை தவிர, ஸூறாக்கள், அத்கார்கள், ஹதீஸ்கள், துஆக்கள் முதலியவற்றில் எழுத்துக்கள் சரியாக உச்சரிக்கப்படுகின்றனவா குறித்த சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படு கின்றனவா, சரியாக மனனமிட்டுள்ளனரா என்பதையம் பரீட்சித்தல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்காக அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக 10 ஆம் தரத்தில் வுழு, தயமும், ஜபீறரத், நஜீஸ் நீக்கும் முறை முதலான தலைப்புகள் செய்து காட்டலுக்கூடாக கணிப்பீடு செய்யலாம். உறுப்புக்களைப் பேணுதல், நற் பண்புகள் போன்ற தலைப்புகள் சுய அளவீட்டுப் படிவங்கள் அல்லது முஹாஸபா படிவங்களை வழங்கி கணிப்பீடு செய்யலாம். ஹுகூகுல் இபாத் என்ற தலைப்பில் சிரமதானப் பணியொன்றினை ஏற்பாடு செய்து கணிப்பீடு செய்ய முடியும். சந்தைக்கு அழைத்துச் செல்வதனூடாக விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் தொடர் பான பாடங்களை கணிப்பீடு செய்யலாம். அல்குர்ஆனின் அற்புதம் நபி (ஸல்) அவர்களின் த.்.வத் தொடர்பாக ஆலிம்களைப் பேட்டி கண்டு அதற்கூடாக கணிப்பீடு செய்ய முடியும். இவற்றுக்குப் பொருத்தமான கணிப்பீட்டுக் கருவிகளை ஆசிரியர் தயாரித்துக் கொள்ள வேண்டும். சந்தையில் வர்த்தகம் நிகழ்வதை அவதானிக்கின்ற மாணவர், வாங்குபவன், விற்பவன், வாங்கும் அல்லது விற்கும் பொருள், ஈஜாப் - கபூல், அளவை - நிறுவை, கலப்படம்/ஏமாற்று/மோசடி போன்ற தவறுகள் பற்றி அவதானித்துள்ளனரா என்பதைக் கணிப்பீடு செய்யலாம்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# இஸ்லாமத்
## பாடத்திட்டம் : தரம் - 10
### தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், பாட உள்ளடக்கம்

1.0 அல் அகாஇத்
ஏகத்துவம்(தவ்ஹீத்), தூதுத்துவம் (ரிஸாலத்), இறுதிநாள்(மஆத்) ஆகியவற்றை நம்பி ஒழுகுவார்.

1.1 இஸ்லாமிய அகீதா பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்று அதன்படி ஒழுகுவார்.

1.1.1 அகீதா
- வரைவிலக்கணம்
- முக்கியத்துவம்
- பிரிவுகள்

1.1.2 அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதா

1.2 ஈமானின் தாக்க விளைவுகளையும் ஈமானுக்கெதிரானவைகளால் ஏற்படும் தாக்க விளைவுகளையும் இனங்கண்டு செயற்படுவார்.

1.2.1 வாழ்க்கையில் ஈமானின் தாக்கம்

1.2.2 ஈமானுக்கு முரணான அம்சங்கள்
- ரித்தத்
- குப்ர்
- ஷிர்க்

2.0 அல் இபாதத்
வாழ்வே வணக்கம் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றி வருவார்.

2.1 இபாதத்துகளை சரியான ஒழுங்கில் நிறைவேற்றவதற்கான அறிவைப் பெற்றுக் கொள்வார்.

2.1.1 அல் இபாதத்
- வரைவிலக்கணம்
- வகைகள்
- பர்ளு ஐன், பர்ளு கிபாயா

2.1.2 தஹாரத்
- நீரின் வகைகள்
- நஜீஸின் வகைகள்
- நஜீஸ் நீக்கும் முறை
- வுழு, தயம்மும், ஜபீரத்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

2.2 அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து நிறைவேற்றும் பக்குவத்தையும் பயிற்சியையும் பெற்று அவற்றை நிறைவேற்றுவார்.

2.2.1 ஸிபதுஸ் ஸலாத்

2.2.2 அஸ் ஸவ்ம்

- விதி முறைகள்
- பயன்பாடுகள்

3.0 அல் அக்லாக் வஸ்ஸுலூக்

நற்குணமும் நன்னடத்தையும் மிக்கவராக விளங்குவார்.

3.2 இறை திருப்தியை நாடி அவற்றை வாழ்வில் தொடர்ந்து கடைப்பிடிப்பார்.

3.2.1 ஈமானும் இக்லாஸும்

3.2.2 முஹாஸபா

3.2.3 நாவைப் பேணுதல்

- உண்மை உரைத்தல்
- வாழ்த்துதல்
- நன்றி கூறல்

3.2.4 ஏனைய உறுப்புக்களைப் பேணுதல்

3.2.5 நாணயம்

- பொறுமை
- வீரம்
- பணிவு
- மன்னிப்பு
- நீதி, நேர்மை

3.2.6 நேரம் பேணல்

3.2.7 பெரும்பாவங்கள்

**4.0** பிக்ஹுல் உஸ்ரா

இஸ்லாமிய குடும்ப வாழ்க்கையின் வழிகாட்டுதல்களைப் பெற்று ஒழுகுவார்.

4.1 குடும்பத்திற்குரிய கடமைகளை உணர்வுபூர்வமாகவும் சரியாகவும் இனங்கண்டு நிறைவேற்றுவார்.

4.1.1 குடும்பப் பரிபாலனம்

4.1.2 பெண்ணுரிமைகள்

4.1.3 உணவும் உடையும்

- ஹராத்தைத் தவிர்த்தல்

4.1.4 பெற்றோரை மதித்தல்

4.1.5 ஹுகூகுல் இபாதத்

4.1.6 நடுநிலைமை (வஸதிய்யா)

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

5.0 பிக்ஹுல் மாலிய்யாத்
உழைப்பிலும் வருமானத்திலும் ஹலால், ஹராம் பேணி நம்பிக்கை நாணயத்துடன் நடப்பார்.

5.1 பொருளியில் நடவடிக்கைகள் பற்றிய இஸ்லாத்தின் போதனைகளைச் சரியாக அறிந்து கொள்வார்.

5.1.1 உழைப்பின் முக்கியத்துவம்

5.1.2 தொழில் மகத்துவதம்

5.2 அவை பற்றிய சட்டவிதிகளை விரிவாக விளங்கி சமூக வாழ்வில் நடைமுறைப் படுத்துவார்.

5.2.1 இஸ்லாத்தில் வியாபாரம்

- விதிகள்
- ஒழுக்காறுகள்
- தடை செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

5.2.2 விவசாயமும் கைத்தொழிலும்

6.0 வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் ஷரீஆவின் கண்ணோட்டத்தில் அணுகுவார்.

6.1 அல்குர்ஆனும் ஸுன்னாவும் எவ்வாறு சட்ட மூலாதாரங்களாக அமைகின்றன என்பதை விளங்கி அவற்றைக் கற்க ஆரம்பிப்பார்.

6.1.1 அல்குர்ஆன் சட்ட மூலாதாரம்

6.1.2 ஸுன்னா சட்ட மூலாதாரம்

6.2 துணை மூலாதாரங்களை இனங்கண்டு அவை எவ்வாறு சமூகத்துக்குப் பயன்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டுவார்.

6.2.1 இஜ்திஹாத்

6.2.2 இஜ்மாஉம் கியாஸும்

4.2.3 ஏனைய சட்ட மூலாதாரங்கள்

7.0 அஸ்ஸீறா வத்தாரீக்
வாழ்க்கைக்குத் தேவையான அடையாள புருஷர்களை இனங்கண்டு பின்பற்றி ஒழுகுவார்.

7.1 நபி (ஸல்) அவர்களின் வாழ்வை விரிவாக விளங்கி தமது வாழ்வில் முன்மாதிரியாக ஏற்று நடப்பார்.

7.1.1 நபி (ஸல்) பிறக்கும்போது அரபு நாட்டின் சமூக சூழல்

7.1.2 தஃவா வாழ்வுடன் தொடர்பான நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கை

7.1.3 தஃவா வாழ்வுடன் தொடர்பான நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கை

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

7.2 நபி (ஸல்) அவர்களின் மனைவியர், குடும்பத்தவர்களின் வாழ்வை விளங்கி அவற்றினூடாகக் கிடைக்கும் படிப்பினைகளைப் பின்பற்றி வாழ்வார்.

7.2.1 உம்மஹாத்துல் மு.்.மினீன்

- வரலாறும்
- பணியும்

7.2.2 அஹ்லுல் பைத்

- வரலாறும்
- பணியும்

8.0 மபாஹிமுல் இஸ்லாமிய்யா

நடைமுறை விவகாரங்கள் பற்றிய இஸ்லாமிய நோக்குகளை அறிந்து கடைப்பிடிப்பார்.

8.1 இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும் எல்லா சூழ் நிலைக்கும் பொருத்தமானது என்பதை விளங்கி சமகால வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார். பின்வருவன பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

8.1.1 உலக வாழ்வு

8.1.2 பொழுதுபோக்கு

8.1.3 அறிஞர்கள் - ஆலிம்கள்

8.1.4 அறிவியல்

8.1.5 அல்குர்ஆனின் அற்புதம்

8.1.6 உள ஆரோக்கியம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கற்பித்தலுக்கான உத்தேச பாடவேளைகள் - தரம் 10

| | தேர்ச்சி | பாடவேளைகள் |
|---|---|---|
| 01. | 1.0 | 06 |
| 02. | 2.0 | 08 |
| 03. | 3.0 | 12 |
| 04. | 4.0 | 08 |
| 05. | 5.0 | 08 |
| 06. | 6.0 | 06 |
| 07. | 7.0 | 08 |
| 08. | 8.0 | 14 |
| | **மொத்தப் பாடவேளைகள்** | 70 |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.